சுருக்கம்

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் – திருப்பூர், நாமக்கல், ஈரோடு, தஞ்சாவூர், கரூர், திருவள்ளூர், புதுக்கோட்டை, கடலூர், தருமபுரி, சிவகங்கை, இராமநாதபுரம் மற்றும் மயிலாடுதுறை ஆகிய 12 மாவட்டங்களிலுள்ள கிராம ஊராட்சிகளை 25 பேரூராட்சிகளுடன் இணைத்து எல்லைகளை விரிவாக்கம் செய்தல் – உத்தேச முடிவு – ஆணைகள் – வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.2) துறை

அரசாணை (நிலை) எண்.205 நாள்: 31.12.2024

திருவள்ளுவர் ஆண்டு – 2055

ஸ்ரீ குரோதி வருடம், மார்கழி–16

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.142, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 23.11.2023.
2. மாவட்ட ஆட்சியர், திருப்பூர் அவர்களின் கடித ந.க.எண்.2020/ 2024/ அ2, நாள்.20.12.2024.
3. மாவட்ட ஆட்சியர், நாமக்கல் அவர்களின் கடித ந.க.எண்.ஒய்1/ 13296/ 2024, நாள்.20.12.2024
4. மாவட்ட ஆட்சியர், ஈரோடு அவர்களின் கடித ந.க.எண்.926/ 2022/அ4, நாள்.21.12.2024.
5. மாவட்ட ஆட்சியர், தஞ்சாவூர் அவர்களின் கடித ந.க.எண்.2091/ 2024/ அ3, நாள்.19.12.2024.
6. மாவட்ட ஆட்சியர், கரூர் அவர்களின் கடித ந.க.எண்.3464/2023/ பேரூ3, நாள் 17.12.2024.
7. மாவட்ட ஆட்சியர், திருவள்ளூர் அவர்களின் கடித ந.க.எண்.2166/2023 /அ1, நாள்.20.12.2024.
8. மாவட்ட ஆட்சியர், புதுக்கோட்டை அவர்களின் கடித ந.க.எண்.5691/2023/அ7, நாள்.21.12.2024.
9. மாவட்ட ஆட்சியர், கடலூர் அவர்களின் கடித ந.க.எண்.பி1/04/ 2024, நாள்.21.12.2024
10. மாவட்ட ஆட்சியர், தருமபுரி அவர்களின் கடித ந.க.எண்.05/ 2024/ பே3 நாள்.21.12.2024.
11. மாவட்ட ஆட்சியர், சிவகங்கை அவர்களின் கடித ந.க.எண்.அ2/ 187/2022, நாள்.21.12.2024
12. மாவட்ட ஆட்சியர், இராமநாதபுரம் அவர்களின் கடித ந.க.எண்.ஊநி6/7428/2023, நாள்.21.12.2024.

13. மாவட்ட ஆட்சியர், மயிலாடுதுறை அவர்களின் கடித ந.க.எண்.2624/2023 பேரூ.3 நாள்.20.12.2024.

*******

ஆணை :

தமிழ்நாடு சட்டப்பேரவையில், 2021–22ஆம் ஆண்டிற்கான இத்துறையின் மானியக் கோரிக்கையின்போது, பிறவற்றுடன் கீழ்க்காணுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது:

"2011ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இம்மாநிலத்தின் நகர்ப்புர மக்கள் தொகை 48.45 சதவீதம் ஆகும். 2021ஆம் ஆண்டு தற்போதைய சூழலில் மொத்த மக்கள் தொகையில் நகர்ப்புர மக்கள் தொகை சுமார் 53 சதவீதமாக உயர்ந்துள்ளதென கருதப்படுகிறது. எனவே, மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளை ஒட்டியுள்ள நகர்ப்புரத் தன்மையோடு உள்ள பகுதிகளை நகர்ப்புரங்களோடு இணைத்து தேவையான கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவது இன்றியமையாததாகக் கருதப்படுகிறது.

தற்போது நகராட்சியாக உள்ள உள்ளாட்சி அமைப்புகளை மாநகராட்சியாகவும், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சி அமைப்புகளை நகராட்சியாகவும், அதேபோன்றே மாநகராட்சிகள், நகராட்சிகளில் சிலவற்றை விரிவாக்கம் செய்திடவும் தொடர்ந்து கோரிக்கைகள் வந்தவண்ணம் உள்ளன.

தற்போதுள்ள நகர்ப்புர உள்ளாட்சிகளைச் சுற்றியுள்ள பகுதிகளில், நகர்ப்புரத்தன்மை, மக்கள் தொகை, மக்கள் தொகை அடர்த்தி, ஆண்டு வருமானம், பொருளாதார முக்கியத்துவம் உள்ளிட்ட பல்வேறு காரணிகளின் அடிப்படையிலும் நகர்ப்புரமாக மாறி வருகின்ற இந்த பகுதிகளிலும் நகரத்திற்கு இணையான அடிப்படை வசதிகளை அளித்திடும் நோக்கிலும் உள்ளாட்சி அமைப்புகள் தரம் உயர்த்தப்படுகிறது."

2. மேலும், உள்ளாட்சி அமைப்புகளின் மறுசீரமைப்பு, அதாவது, நகரமயமாதலின் வீச்சு, நிர்வாகத் தேவைகள், மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைத் திறம்படவும், முழுஅளவிலும் வழங்குதல் (in an efficient and comprehensive manner), உள்ளாட்சிப் பகுதிகளின் எதிர்கால வளர்ச்சிக்கான தேவைகள் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு, அருகருகே அமைந்துள்ள ஊரக மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளை இணைப்பதன் மூலம் புதிய உள்ளாட்சி அமைப்புகளை உருவாக்குதல், எல்லைகளை விரிவாக்கம் செய்தல் போன்றவற்றை ஆய்வு செய்து தக்க செயற்குறிப்புகளை உருவாக்குதல், பரிந்துரைகளை அளித்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசு முதன்மைச் செயலாளர் உள்ளிட்ட உயர் அலுவலர்களைக் கொண்ட உயர்நிலைக் குழுவொன்றை அமைத்து மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

3. மேற்கண்ட, உயர்நிலைக்குழு, பல்வேறு தேதிகளில் கூடி இப்பொருண்மைகள் மீது விரிவான ஆலோசனைகளை / விவாதங்களை

மேற்கொண்டது. ஊரக மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் மறுசீரமைப்பு, புதிய உள்ளாட்சி அமைப்புகளை உருவாக்குதல், உள்ளாட்சி அமைப்புகளின் எல்லைகள் விரிவாக்கம் தொடர்பாக, நகரமயமாதலின் வீச்சு, நிர்வாகத் தேவைகள், மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைத் திறம்படவும், முழுஅளவிலும் வழங்குதல் (in an efficient and comprehensive manner), உள்ளாட்சிப் பகுதிகளின் எதிர்கால வளர்ச்சிக்கான தேவைகள், உள்ளாட்சி அமைப்புகள் உள்ளிட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள், ஊரக மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் பல்வேறு நிலைகளைச் சேர்ந்த அலுவலர்கள் போன்ற தொடர்புடைய அனைத்து தரப்பினரின் (Stakeholders) கோரிக்கைகள்/கருத்துகள் போன்றவை உயர்நிலைக்குழுவின் பல்வேறு கூட்டங்களில் ஆய்வு செய்யப்பட்டு, விவாதிக்கப்பட்டு பல்வேறு தற்காலிக செயற்குறிப்புகள் (Tentative Proposals) உருவாக்கப்பட்டன.

4. மேலும், இப்பொருள் தொடர்பான பல்வேறு பொருண்மைகள் குறித்து உயர்நிலைக் குழுவால் 18.12.2024 அன்று காணொளி வாயிலாக 28 மாவட்ட ஆட்சியர்களுடன் இறுதி ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டன.

5. அதனடிப்படையில், திருப்பூர், நாமக்கல், ஈரோடு, தஞ்சாவூர், கரூர், திருவள்ளூர், புதுக்கோட்டை, கடலூர், தருமபுரி, சிவகங்கை, இராமநாதபுரம் மற்றும் மயிலாடுதுறை ஆகிய 12 மாவட்டங்களில் உள்ள கிராம ஊராட்சிகளை 25 பேரூராட்சிகளுடன் இணைத்து எல்லைகளை விரிவாக்கம் செய்வது குறித்து மேலே 2 முதல் 13 வரை படிக்கப்பட்ட கடிதங்களில் தொடர்புடைய மாவட்ட ஆட்சித் தலைவர்கள் செயற்குறிப்புகளை அரசுக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

6. கிராம ஊராட்சிகளை பேரூராட்சிகளுடன் இணைத்து அவற்றின் எல்லைகளை விரிவாக்கம் செய்வது தொடர்பாக பின்வரும் முக்கிய காரணங்களால் முடிவு செய்யப்படுகிறது:

(அ) பெரும்பாலான ஊரகப்பகுதிகள் நகர்ப்புரப் பகுதிகளுக்கு இணையான வளர்ச்சியை அடைந்து வருகின்றன. எனவே, இத்தகைய ஊரகப் பகுதிகளிலும், நகர்ப்புரங்களுக்கு இணையான வகையில் சாலைகள், குடிநீர், திடக்கழிவு மேலாண்மை, திரவக்கழிவு மேலாண்மை, பொது / சமுதாய பயன்பாட்டிற்கான நவீன கழிப்பிடங்கள், பாதாளச் சாக்கடை கட்டமைப்பு, ஆற்றல்மிகு தெருவிளக்குகள் போன்ற மக்களுக்கான இன்றியமையாத அடிப்படை வசதிகளை விரிவுப்படுத்த வேண்டியது அவசியமாகிறது.

(ஆ) வேகமாக நகரமயமாகிவரும்/வளர்ச்சியடைந்துவரும் பெரும்பாலான சிறிய உள்ளாட்சி அமைப்புகளால் மக்களுக்கு தேவையான அடிப்படை மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கான நிதி/இடப்பற்றாக்குறை மற்றும் உட்கட்டமைப்பு வசதி திட்டங்களை நிறைவேற்றுதல், மக்களுக்கான அடிப்படை வசதிப் பணிகள் / சேவைகளின் விரைவான, திறம்பட்ட செயலாக்கத்திற்கு தேவைப்படும் பொறியாளர்கள் உள்ளிட்ட பணியமைப்பு குறைந்த அளவிலேயே உள்ளது போன்றவற்றை களையவும் (to overcome) பேரூராட்சிகளாக தரம் உயர்த்துதல் அவசியமாகிறது.

(இ) கிராம ஊராட்சிகளை பேரூராட்சிகளாகத் தரம் உயர்த்துவதால், அப்பகுதிகளில் குடியிருக்கும் பொதுமக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதுடன், அடிப்படை வசதிகள், கட்டமைப்பு மேம்பாடு, மேம்படுத்தப்பட்ட சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதிகளும் அவர்களுக்குக் கிடைக்கும். இந்த மேம்பாட்டினால், பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் புதிய தொழிலகங்கள் ஏற்படவும், வேலைவாய்ப்பு உருவாகவும், வருவாய் பெருகவும், அனைத்துத் தரப்பு வளர்ச்சிக்கும் வழிவகுக்கும்.

7. இந்நிலையில், அரசு, மேலே 2 முதல் 13 வரையில் படிக்கப்பட்ட மாவட்ட ஆட்சியர்களின் செயற்குறிப்பினை கவனமாகப் பரிசீலித்து பின்வரும் அட்டவணையில் உள்ளவாறு திருப்பூர், நாமக்கல், ஈரோடு, தஞ்சாவூர், கரூர், திருவள்ளூர், புதுக்கோட்டை, கடலூர், தருமபுரி, சிவகங்கை, இராமநாதபுரம் மற்றும் மயிலாடுதுறை ஆகிய 12 மாவட்டங்களில் உள்ள கிராம ஊராட்சிகளை 25 பேரூராட்சிகளுடன் இணைத்து எல்லைகளை விரிவாக்கம் செய்வது என உத்தேச முடிவு மேற்கொண்டு, அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

| வ. எண். | மாவட்டம் | ஊராட்சி ஒன்றியம் | ஊராட்சிகளின் பெயர் | இணைக்கப்பட உள்ள பேரூராட்சியின் பெயர் | எல்லை விரிவாக்கம் செய்வதற்கான அவசியம் / காரணம் |
|---|---|---|---|---|---|
| 1 | கடலூர் | கம்மாபுரம் | பெரியாக்குறிச்சி | கங்கைகொண்டான் | நகர்ப்புரப் பகுதிகளுக்கு அருகில் உள்ள வளர்ச்சி அடைந்த ஊராட்சி. |
| 2 | தருமபுரி | பாலக்கோடு | ஜெர்தலாவ் | பாலக்கோடு | நகர்ப்புரப் பகுதிகளுக்கு அருகில் உள்ள வளர்ச்சி அடைந்த ஊராட்சி. |
| | | பாப்பிரெட்டிபட்டி | வெங்கட்டசமுத்திரம் | பாப்பிரெட்டிபட்டி | |
| | | பென்னாகரம் | மாதேஅள்ளி | பாப்பாரப்பட்டி | |
| | | | பருவதனஅள்ளி | பென்னாகரம் | |
| 3. | ஈரோடு | அம்மாபேட்டை | படவல்கால்வாய் | அம்மாபேட்டை | அதிகமான மக்கள் தொகை, அதிகமான குடியிருப்புப் பகுதிகள், மற்றும் தொழிற்சாலைகள் உள்ளன. |
| | | தூக்கநாயக்கன் பாளையம் | அக்கரைகொடிவேரி | பெரிய கொடிவேரி | |
| 4 | கரூர் | அரவக்குறிச்சி | வேலம்பாடி | அரவக்குறிச்சி | நகர்ப்புரப் பகுதிகளுக்கு அருகில் உள்ள வளர்ச்சி அடைந்த கிராம ஊராட்சி. |
| 5. | மயிலாடுதுறை | சீர்காழி | கதிராமங்கலம் ஊராட்சி (பகுதி) வார்டு எண்.1 மற்றும் 2 | வைத்தீஸ்வரன் கோவில் | நகர்ப்புரப் பகுதிகளுக்கு அருகில் உள்ள வளர்ச்சி அடைந்த மற்றும் வளர்ச்சி பெற்று வரும் பகுதி. |
| 6 | நாமக்கல் | பள்ளிப்பாளையம் | புதுப்பாளையம் அக்ரஹாரம் | ஆலம்பாளையம் | அதிகமான மக்கள் தொகை மற்றும் அதிகமான குடியிருப்புப் பகுதிகள் உள்ளன. |
| | | | ஓடப்பள்ளி அக்ரஹாரம் | | |
| 7. | புதுக்கோட்டை | அன்னவாசல் | எண்ணை ஊராட்சியில் மீராத்தான் குண்டு மற்றும் பாத்திமா நகர் (7வது வார்டு பகுதி) | இலுப்பூர் | மக்கள் தொகை, குடியிருப்பு அல்லாத கட்டடங்களின் எண்ணிக்கை அதிகம், விளை நிலங்கள் குறைவு. |
| 8 | இராமநாதபுரம் | கமுதி | நத்தம் (பகுதி) வார்டு எண்.4 மற்றும் 5, மணிநகரம் வார்டு 6 (பகுதி) | அபிராமம் | நகர்ப்புரப் பகுதிகளுக்கு அருகில் உள்ள வளர்ச்சி அடைந்த மற்றும் வளர்ச்சி பெற்று வரும் பகுதி. |
| | | | நாராயணபுரம் ஊராட்சியில் கோட்டைமேடு (வார்டு எண். 7,8,9) மற்றும் போலிஸ்லைன் (வார்டு எண்.4) | கமுதி | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | மண்டபம் | மரைக்காயர்பட்டிணம் | மண்டபம் | நகர்ப்புரப் பகுதிகளுக்கு அருகில் உள்ள வளர்ச்சி அடைந்த மற்றும் வளர்ச்சி பெற்று வரும் பகுதி. |
| | | முதுகுளத்தூர் | எம்.தூரி (வார்டு எண். 1), செல்வநாயகபுரம்– மீனாட்சிபுரம் (வார்டு எண் 6), செல்வநாயகபுரம் (வார்டு எண் 2,3,4,5) | முதுகுளத்தூர் | |
| | | திருவாடனை | கொடிப்பாங்கு ஊராட்சியில் விளக்கனேந்தல், வேலன்குடி (வார்டு எண். 6), மாமலக்கரை (வார்டு எண்.5) | தொண்டி | |
| 9 | சிவகங்கை | சாக்கோட்டை | வீரசேகரபுரம் வார்டு –6 (பகுதி) | புதுவயல் | நகர்ப்புரப் பகுதிகளுக்கு அருகில் உள்ள வளர்ச்சி அடைந்த ஊராட்சி. |
| | | | வடகுடி | பள்ளத்தூர் | |
| | | சிங்கம்புணரி | அணைக்கரைப்பட்டி வார்டு –5, 6, 7, 8 (ம) 9 (பகுதி) | சிங்கம்புணரி | |
| | | திருப்பத்தூர் | இரணசிங்கபுரம் | திருப்பத்தூர் | |
| | | | காட்டாம்பூர் வார்டு –8 (பகுதி) | | |
| 10 | தஞ்சாவூர் | பாபநாசம் | சக்கராப்பள்ளி | அய்யம்பேட்டை | அதிக மக்கள்தொகை அடர்த்தி மற்றும் அதிக குடியிருப்புப் பகுதிகள். |
| 11 | திருப்பூர் | மடத்துக்குளம் | ஜோத்தம்பட்டி | கணியூர் | நகர்ப்புரப் பகுதிகளுக்கு அருகில் உள்ள வளர்ச்சி அடைந்த ஊராட்சி. |
| 12 | திருவள்ளூர் | கும்மிடிப்பூண்டி | புது கும்மிடிப்பூண்டி | கும்மிடிப்பூண்டி | அதிகளவில் தொழிற்சாலைகள், போக்குவரத்திற்கான முக்கிய சாலையான GNT சாலையில் தமிழ்நாடு மற்றும் ஆந்திர மாநில எல்லைப்பகுதியில் அமைந்துள்ளது. இதன் அருகில் அமைந்துள்ள புது கும்மிடிப்பூண்டி மற்றும் பெத்திக்குப்பம் ஊராட்சியிலும் பெருமளவு தொழிற்சாலைகளும் சிப்காட் தொழிற்பேட்டை அமைந்துள்ளது. |
| | | | பெத்திகுப்பம் | | |
| | | சோழவரம் | மல்லியன்குப்பம் | ஆரணி | ஆரணி பேரூராட்சியில் சுற்றுப்புற கிராமங்களில் இருந்து விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் அதிகளவில் கூடும் தினசரி சந்தை நடைபெற்று வருகிறது. ஆரணி பேரூராட்சியில் புதிய பேருந்து நிலையம் அமைக்கப்பட்டு வருவதால் அருகில் வளர்ந்துவரும் மல்லியங்குப்பம் ஊராட்சி பகுதிகளும் பயன்பெற வழிவகை உள்ளது. |
| | | பள்ளிப்பட்டு | இராமசந்திராபுரம் | பள்ளிப்பட்டு | நகர்ப்புரப் பகுதிகளுக்கு அருகில் உள்ள வளர்ச்சி அடைந்த ஊராட்சி. |
| | | | சூரராஜப்பட்டடை | | |

8. இதனடிப்படையில் உத்தேச எல்லை விரிவாக்கம் செய்யப்படும் பேரூராட்சிகளுக்கான வார்டு எண்ணிக்கை மறுநிர்ணயம் செய்யப்பட்டு, வார்டு எல்லைகள் வரையறை செய்யப்பட்டு, பேரூராட்சி மன்றங்களுக்கான அடுத்த பொதுத் தேர்தல் நடத்தப்படும்.

9. இதுகுறித்து, 1998ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தின், 3ஆம் பிரிவின் வகைமுறைகளின்படி, தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அவ்வாறே மேற்குறிப்பிடப்பட்டுள்ள 3ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின்கீழ் இவ்வாணையுடன் இணைக்கப்பட்டவாறான அறிவிக்கை (ஆங்கிலத்தில்), 31.12.2024–ஆம் நாளிட்ட *தமிழ்நாடு அரசிதழின் சிறப்பிதழில்* வெளியிடப்படும்.

10. இதனடிப்படையில் உத்தேச புதிய பேரூராட்சிகளுக்கான வார்டு எண்ணிக்கை மறுநிர்ணயம் செய்யப்பட்டு, வார்டு எல்லைகள் வரையறை செய்யப்பட்டு, பேரூராட்சி மன்றங்களுக்கான அடுத்த பொதுத் தேர்தல் நடத்தப்படும்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**தா. கார்த்திகேயன்**
**அரசு முதன்மைச் செயலாளர்**

**பெறுநர்:–**

பணி மேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை–600 001.
(இவ்வரசாணையுடன் இணைக்கப்பட்டுள்ள அறிவிக்கையை தமிழ்நாடு அரசின் சிறப்பிதழில் வெளியிடவும் மற்றும் அதன் 50 பிரதிகளை அரசுக்கு அனுப்பி வைக்கவும்)
அரசு முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை–600 009.
நகராட்சி நிருவாக இயக்குநர், சென்னை–600 028.
பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை–600 028.
இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை–600 015.
தொடர்புடைய மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
(பேரூராட்சிகளின் இயக்குநர் வழியாக)
தொடர்புடைய வட்டார வளர்ச்சி அலுவலர்கள்,
(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் வழியாக)
தொடர்புடைய பேரூராட்சி செயல்அலுவலர்கள்
(பேரூராட்சிகளின் இயக்குநர் வழியாக)

**நகல்:**

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–600 009.
மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–600 009.
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–600 009.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை–600 009.
சட்டத்துறை, சென்னை–600 009.
செயலாளர், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம், அரும்பாக்கம், சென்னை–600 106.
செயலாளர், தமிழ்நாடு மறுவரையறை ஆணையம், அரும்பாக்கம், சென்னை–600 106.
அரசு முதன்மைச் செயலரின் முதுநிலை முதன்மை தனிச் செயலர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை–600 009.
நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அ.ந.2) துறை, சென்னை–600 009.

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

31.12.24
**பிரிவு அலுவலர்**
31/12/24

## APPENDIX

## NOTIFICATION

In exercise of the powers conferred by sub-clause (i) of clause (a) of sub-section (2) of section 3 of the Tamil Nadu Urban Local Bodies Act, 1998 (Tamil Nadu Act 9 of 1999), the Governor of Tamil Nadu hereby declares his intention to include the local areas specified in column (4) to the extent specified in column (5), within the limits of the Town Panchayats specified in column (6) of the Table below:-

**THE TABLE**

| Sl. No. | Name of the District | Name of the Panchayat Union | Name of the Local Area | Extent of the Local Area proposed to be included | Name of the Town Panchayats |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | Cuddalore | Kammapuram | Peryakurichi Village Panchayat | Full | Gangaikondan |
| 2. | Dharmapuri | Palacode | Jerthalav Village Panchayat | Full | Palacode |
| | | Pennagaram | Madhehalli Village Panchayat | Full | Paparapatti |
| | | | Paruvathanahalli Village Panchayat | Full | Pennagaram |
| | | Pappireddipatti | Venkada Samudram Village Panchayat | Full | Pappireddipatti |
| 3. | Erode | Ammapettai | Padavalkalvai Village Panchayat | Full | Ammapettai |
| | | Thookanainaicken palayam | Akkaraikodiveri Village Panchayat | Full | Periakodiveri |
| 4. | Karur | Aravakurichi | Velambadi Village Panchayat | Full | Aravakurichi |
| 5. | Mayiladuthurai | Sirkali | Ward No.1 and 2 in Kathiramangalam Village Panchayat | Part | Vaitheeswaran kovil |
| 6. | Namakkal | Pallipalayam | Pudupalayam Agraharam Village Panchayat | Full | Alampalayam |
| | | | Odappalli Agraharam Village Panchayat | Full | |
| 7. | Pudukottai | Annavasal | Meerathangundu and Fathima Nagar in Ward No.7 in Ennai Village Panchayat | Part | Illupur |
| 8. | Ramanatha puram | Kamuthi | Ward No.4 and 5 in Natham Village Panchayat and Ward No.6 in Maninagaram | Part | Abiramam |
| | | | Ward No.7,8,9 in Kottaimedu and police line in Ward No.4 in Narayanapuram Village Panchayat | Part | Kamuthi |
| | | Mandapam | Maraikayarpattinam Village Panchayat | Full | Mandapam |
| | | Mudukulathur | M.Thoori (Ward No.1), Selvanayagapuram – Meenakshipuram (Ward No.6), Selvanayagapuram (Ward No.2,3,4,5) | Part | Mudukulathur |
| | | Thiruvadanai | Vilakkanenthal and Velangudi (Ward No.6), Mamalakarai (Ward No.5) in Kodipangu Village Panchayat | Part | Thondi |

| Sl. No. | Name of the District | Name of the Panchayat Union | Name of the Local Area | Extent of the Local Area proposed to be included | Name of the Town Panchayats |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 9. | Sivagangai | Sakottai | Vadagudi Village Panchayat | Full | Pallathur |
| | | | Ward No. 6 in Veerasekarapuram Village Panchayat | Part | Puduvayal |
| | | Singampunari | Ward No.5,6,7,8 and 9 in Anaikaraipatti Village Panchayat | Part | Singampunari |
| | | Tirupathur | Ranasingapuram Village Panchayat | Full | Tirupathur |
| | | | Ward No.8 in Kattambur Village Panchayat | Part | |
| 10. | Thanjavur | Pabanasam | Chakkarapalli Village Panchayat | Full | Ayyampet |
| 11. | Tiruppur | Madathukulam | Jothampatti Village Panchayat | Full | Kaniyur |
| 12. | Tiruvallur | Gummudipoondi | Pudu Gummidipundi Village Panchayat | Full | Gummudipoondi |
| | | | Peddikuppam Village Panchayat | Full | |
| | | Sholavaram | Malliankuppam Village Panchayat | Full | Arani |
| | | Pallipattu | Ramachandrapuram Village Panchayat | Full | Pallipattu |
| | | | Surarajapattadai Village Panchayat | Full | |

Based on the above inclusion, wards will be divided for the next General Election.

**2.** Notice is hereby given that, any person residing within the local area concerned in relation to this Notification or any local authority affected by this Notification may submit objections, if any, in writing to the Principal Secretary to Government, Municipal Administration and Water Supply Department, Secretariat, Fort St.George, Chennai-600 009. Such objections shall be submitted within six weeks from the date of publication of this Notification in the Tamil Nadu Government Gazette and the objections received within the said period will be taken into consideration under clause (c) of sub-section (2) of section 3 of the said Act.

**D. KARTHIKEYAN**
**PRINCIPAL SECRETARY TO GOVERNMENT**

**//TRUE COPY//**

**SECTION OFFICER**

31.12.24.